ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் |
| திகதி | 2020.07.13 |

## சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதனை ஊக்குவிப்பதற்கான மேலதிக வழிமுறைகள்

நாட்டில் கொவிட்-19 நோய்த்தொற்றின் தாக்கங்களை வெற்றிகொள்வதற்கான தேசிய முயற்சிக்கு ஆதரவினை நாடும் பொருட்டு இலங்கை அரசாங்கமானது 2020.04.08ஆம் திகதியன்று சிறப்பு வைப்புக் கணக்கினை அறிமுகப்படுத்தியது. இதற்குச் சாதகமாக பதிலிறுத்தி இதுவரையிலும் சிறப்பு வைப்புக் கணக்குகளினுள் ஐ.அ.டொலர் 87 மில்லியன் தொகையினை (ஏறத்தாழ) இலங்கை பெற்றுக்கொண்டுள்ளது என்பதனைக் குறிப்பிடுவது ஊக்கமளிக்கின்றது.

இலங்கை அரசாங்கமானது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையுடனான ஆலோசனையுடன் சிறப்பு வைப்புக் கணக்குகளை ஊக்குவிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டவாறு மேலும் வழிமுறைகளை எடுத்துள்ளது.

1. **சிறப்பு வைப்புக் கணக்குகளின் நிதியிடல் மூலங்களை விரிவுபடுத்தல்**

(அ) **2020.01.01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு பின்னர்** வெளிநாடுகளிலிருந்து இலங்கையை வந்தடைந்த எவரேனும் ஆள், பின்வருவனவற்றுக்கு உட்பட்டு அத்தகைய ஆள் மூலம் சட்டமுறையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு இலங்கையினுள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலிருந்து **2020.10.07 அன்று அல்லது அதற்கு முன்னர்** எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறக்கமுடியும்:

i அத்தகைய வெளிநாட்டுச் செலாவணித் தொகையானது ஐ.அ.டொலர் 15,000 இனை அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் அதற்கு சமனான தொகையினை விஞ்சுகின்றவிடத்து வந்திறங்குகின்ற தளத்தில் இலங்கைச் சுங்கத்திற்கு வழங்கப்படும் **வெளிப்படுத்தலொன்று.**

ii அத்தகைய வெளிநாட்டுச் செலாவணியின் தொகையானது ஐ.அ.டொலர் 15,000 அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் அதே தொகைக்குச் சமனானதாக அல்லது குறைவானதாக இருக்குமிடத்து தொடர்புடைய அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கான **வெளிப்படுத்தலொன்று.**

(ஆ) இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற எவரேனும் ஆள், நிதியங்களின் மூலம் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கான வெளிப்படுத்தலொன்றுக்கு உட்பட்டு, **ஐ.அ.டொலர் 15,000**

கொண்ட வரையறை வரை அத்துடன் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளினதும் கட்டளைகளினதும் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவரது உடமையிலுள்ள வெளிநாட்டு நாணயத் தாள்களிலிருந்து 2020.10.07ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறக்கலாம்.

(இ) இது தொடர்பில், இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆளொருவர் மூலம் அவரது உடமையில் வைத்திருக்கக்கூடிய வெளிநாட்டு நாணயத்தின் தொகையானது 2020.07.01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் ஐ.அ.டொலர் 10,000 இலிருந்து ஐ.அ.டொலர் 15,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

**2. சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கு எதிராக கடன்களைப் பெற்றுக்கொள்ளல்**

சிறப்பு வைப்புக் கணக்கு வைத்திருப்போர் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கு எதிராகப் பின்வருமாறு கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(அ) வதிவோர் இலங்கை ரூபாவில்
(ஆ) நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக கடன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடைய சிறப்பு வைப்புக் கணக்கு வைத்திருக்கின்ற வதியாதோர்

மேற்குறித்தவை தொடர்பில் மேலதிகத் தகவல்களைப் பின்வருமாறு பெற்றுக்கொள்ளமுடியும்.

(அ) இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வெப்தளத்தில் (www.dfe.lk) “தரவிறக்கம்” இன் கீழ் கிடைக்கப்பெறுகின்ற பின்வருவனவற்றை பெறுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

i. 2020.04.08ஆம் திகதியிடப்பட்ட 2170/4ஆம் இலக்க அரசாங்க (அதிவிசேட) வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள்.
ii. 2020.07.01ஆம் திகதியிடப்பட்ட 2182/32ஆம் இலக்க அரசாங்க (அதிவிசேட) வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள்.
iii. 2020.07.01ஆம் திகதியிடப்பட்ட 2182/33ஆம் இலக்க அரசாங்க (அதிவிசேட) வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளை.
iv. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட 2020.07.06ஆம் திகதியிடப்பட்ட 2020இன் 6ஆம் இலக்கப் பணிப்புரைகள்.

(ஆ) **பணிப்பாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி,** இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: +94 112 477 255, +94 112 477 244, +94 112 477 433
மின்னஞ்சல் : dfe@cbsl.lk

(இ) இலங்கையிலுள்ள எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்.